சாட்சிகளின் வாக்குமூலம்
(கு.வி.மு.ச.அத்தியாயம் -23)

**உதவி அமர்வு நீதிமன்றம், பெருந்துறை.**

**அமர்வு வழக்கு எண்: 131/2024**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 18ம் நாள் அ.சா. 3ஆக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.எம்.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., உதவி அமர்வு நீதிபதி, பெருந்துறை அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது. பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | மணிகண்டன் |
| த.க.பெயர் | சற்குணராஜன் |
| கிராமம் | திண்டுக்கல் |
| மாவட்டம் | |
| வயது | 36 |

| ஆஜர் எதிரிகள் | ஆஜரில்லாத எதிரிகள் |
|---|---|
| 1.ரகு (எ) மேட்டுர் ரகு<br>2.அரவிந்த் (எ) மச்சி அரவிந்த்<br>3.செந்தில்குமார் (எ) அரைப்பால் செந்தில்<br>4.கனகசபாபதி | |

நாள் 18.03.2026

அ சா 3 முதல் விசாரணை

நான் தற்போது திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2017 ம் ஆண்டு நான் என் பெற்றோர் மற்றும் தம்பி கணேஷ் ஆகியோருடன் ஈங்கூரில் குடியிருந்து வந்தேன். அப்போது என் அப்பா ஈங்கூரில் சாமி பர்னிசர் என்ற பெயரில் கடை வைத்திருந்தார். நான் என் தகப்பனாருடன் கடையை பார்த்துக் கொண்டேன். என் தகப்பனார் TN 28 1905 என்ற வெள்ளை நிற பொலிரோ ஜீப் வாகனத்தை ரூ.5,50,000/-த்திற்கு விலைக்கு வாங்கினார். 18.09.2017 அன்று நான் கடையில் இருந்தபோது என் தகப்பனார் எனக்கு போன் செய்து வண்டியை சித்தோடு அருகே உள்ள மேவானிக்கு காரை எடுத்து வரச் சொன்னார். நானும் என் தகப்பனாா சொன்னபடி காரை எடுத்துக் கொண்டு மேவானி பஸ் ஸ்டாப்பில் என் தகப்பனாரிடம் காரை கொடுத்து விட்டு வந்துவிட்டேன். அதன்பின் நான் ஊருக்குசென்று விட்டேன். அதன்பின் 3 நாட்கள் கழித்து என் தகப்பனார் எனக்கு

போன் செய்து கடைக்கு முன்பு நிறுத்தியிருந்த கார் காணாமல் போய்விட்டதாக சென்னிமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாக சொன்னார். பின்பு சிறிது நாள் கழித்து என் தகப்பனார் நீதிமன்றத்தில் இருந்து காரை பெற்றுக் கொண்டதாக சொன்னார். என் தகப்பனார் புகார் கொடுத்த விவரம் எனக்கு நேரில் தெரியாது, போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரிகளை எனக்கு தெரியாது.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது**

**<u>குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)</u>**

நான் 12.09.2017 ஆம்தேதி பகல் 10.00 மணியளவில் நான் எங்கள் கடையில் இருந்த போது மூன்று நபர்கள் எங்கள் கடைக்கு வந்து தேக்கு மர கட்டில் புதிதாக செய்து தர வேண்டுமென்று கேட்டார்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனார் இரண்டு கட்டில்களுக்கும் சேர்த்து ரூ.60,000/- மதிப்பு பெறும் என்று சென்னார் என்றால் சரியல்ல. அப்போது என் தகப்பனார் மூன்று நபர்களும் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்று கேட்டதாகவும் அப்போது உயரமாக தாடியுடன் இருந்த நபர் மேட்டுர் ரகு என்றும் உடன் இருந்தவர் பெயர் குஞ்சாண்டி ஊரை சேர்ந்த அரவிந்தன் என்றும் மற்றொருவர் பவானியை சேர்ந்த செந்தில் குமார் என்றும் சொன்னார்கள் என்றால் சரியல்ல. மீண்டும் 15.09.2017 இரவு 10.00 மணி அளவில் என் தகப்பனார் கடையை பூட்டி விட்டு வீட்டிற்கு கிளம்பிய போது எங்கள் கடைக்கு ஏற்கனவே வந்த மூன்று நபர்கள் TN 28 AE 2600 என்ற ஸ்கார்பியோ காரில் வந்து இறங்கியதாவும் அவர்கள் காரில் இருந்து இறங்கியதும் கட்டில் ரெடியா என கேட்டார்கள் என்றும் என் தகப்பனார் பேசிக் கொண்டேஅருகில் சென்றபோது என் தகப்பனாரை வலுக்கட்டாயமாக தூக்கி காரில்போட்டார்கள் என்றும் அந்த காரில் சபாபதி என்ற நபர் இருந்ததாகவும் காருக்குள் வைத்து கையாலும் காலாலும் அடித்து சித்ரவதை செய்ததாகவும் அங்கிருந்து என் தகப்பனாரை கடத்தி அத்தானி அருகே உள்ள மேவானி என்ற இடத்தில் உள்ள முனுசாமி தோட்டத்தில் உள்ள ஒரு சிறிய ஓட்டு வீட்டில் அடைத்து வைத்ததாகவும் அங்கு வைத்து மேற்படி நபர்கள் என் தகப்பனாரிடம் ரூ.5 லட்சம் கேட்டு மிரட்டினார்கள் என்றும் பணம் கொடுக்க மறுத்தால் குடும்பத்தை ஒழித்து

விடுவோம் என்றும் மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனார் பணம் இல்லை என்று சொன்னதும் அரவிந்தன் என்பவர் அரிவாளால் என் தகப்பனாரின் மார்பிற்கு கீழ் வெட்டினார் என்றும் கத்தியால் விடாமல் என் தகப்பனாரின் இடது கை தோள்பட்டையில் இரண்டு வெட்டும் வலது தோள்பட்டையில் ஒரு வெட்டும் வெட்டினார் என்றும் ரகு என்பவர் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் என் தகப்பனாரின் முதுகு பகுதியில் அடித்தார் என்றும் உடனிருந்த சில நபர்கள் என் தகப்பனாரை கையால் காலால் உதைத்து கொடுமைப்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் அடிப்பதை பொறுத்து கொள்ளாமல் கார் மட்டும் இருக்கிறது என்றவுடன் என் தகப்பனார் என்னை அந்த காரை எடுத்து வரசொன்னார்கள் என்றும் நான் 18.09.2017 அன்று மதியம் 02.00 மணியளவில் என் தகப்பனாருக்கு சொந்தமான பொலிரோ காரை எடுத்து சென்று மேல்வானியில் உள்ள முனுசாமி தோட்டத்தில் நிறுத்தி விட்டு செல்லும்படி சொன்னதன் பேரில் நான் காரை நிறுத்தி விட்டு வந்துவிட்டேன் என்றும் பின்னர் மேற்படி நபர்கள் என் தகப்பனாரின் காரை எடுத்து கொண்டு என் தகப்பனாரை சித்தோடு பஸ்நிறுத்தத்தில் இறக்கி விட்டதாகவும் தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக என் தகப்பனார் சென்னிமலை காவல் நிலையத்தில புகார் கொடுத்தார் என்றும், இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில் ) இல்லை

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.03.18 16:50:18 -1000

Assistant Sessions Judge,
Perundurai.

uploaded by SS